டெரிக் பிரின்ஸ்

# தேவனுடைய வார்த்தையின்

## அதிகாரமும் வல்லமையும்

*Derek Prince Ministries - India*

**“DEVANUDAIYA VARTHAYIN ATHIGARAMUM VALLAMAIYUM”**

© 2010 Derek Prince Ministries - International

Printed by Derek Prince Ministries

All rights reserved.

TAM/5000/0823/LOP

ISBN 978-93-92947-16-2

"AUTHORITY AND POWER OF GOD’S WORD" (Tamil)

**“DEVANUDAIYA VARTHAYIN ATHIGARAMUM VALLAMAIYUM”**

Published by permission in the Tamil language.

No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by means of any information storage and retreival system, without permission in writing from the publisher.

For orders & other enquiries please contact :

**DEREK PRINCE MINISTRIES - INDIA**
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in

Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

Derek Prince
MINISTRIES INDIA

# தேவனுடைய வார்த்தையின் அதிகாரமும் வல்லமையும்

இப்புத்தகத்தில், தேவனுடைய வார்த்தையின் தன்மைகளை நாம் ஆராய விரும்புகிறோம், குறிப்பாக அதின் அதிகாரம் மற்றும் வல்லமையைத் துவக்கும் விதமாக, தேவனுடைய வார்த்தையின் ஊற்று மற்றும் அதின் எழுத்தாளரைச் சிந்திப்பது நலமாயிருக்கும் – அது தேவனே.

“தேவனுடைய வார்த்தை” என்கிற தலைப்புக்கு இரண்டு வித்தியாசமான பயன்பாடுகள் உண்டென்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து மற்றும் வேதம், ‘‘தேவனுடைய வார்த்தை’’ என்று அழைக்கப்படுகின்றது. இயேசுவுக்கும் வேதத்திற்கும் முற்றிலுமான ஒற்றுமை இருக்கிறதென்று இது காண்பிக்கின்றது. வேதம், தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை, இயேசு தேவனுடைய சொந்த வார்த்தை.

இயேசுவோடு நமக்குச் சரியான உறவு வேண்டுமானால், வேதத்தோடு நமக்குச் சரியான

ஒரு உறவு இருக்க வேண்டும். வேதத்தோடு சரியான உறவில்லாமல், இயேசுவிடம் சரியான உறவு இருக்க முடியாது. ஆகையால் **தேவனுடைய வார்த்தையின் அதிகாரமும் வல்லமையும்** என்கிற இந்த கருப்பொருள் நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாய் இருக்கிறது.

## நூலாசிரியர்

அதிகாரம் அல்லது authority என்கிற ஆங்கில வார்த்தை எழுத்தாளர் அல்லது author என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. வேறுவிதமாகச் சொன்னால், எழுத்தாளர்தான் எழுதப்பட்டவைகளுக்கு அதிகாரம் கொடுக்கிறார். ஆகையால் வேதாகமத்தின் எழுத்தாளர் யாரென்று நாம் அறிய வேண்டும். இந்தக் கேள்விக்கு வேதாகமமே தெளிவான பதில் அளிக்கின்றது:

> **வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.**
>
> **2 தீமோதேயு 3:16-17**

ஆகையால் நீங்கள் எந்த நற்கிரியையும் செய்ய முழுமையாக ஆயத்தமாக்கப்பட்டிருக்க வேண்டுமானால், அந்த ஆயத்தத்தின் ஊற்று வேதத்தில்தான் இருக்கிறது. வேத வாக்கியங்கள் எல்லாம் தேவனால் அருளப்பட்டிருக்கின்றன என்று பவுல் கூறுகிற இதில்

பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "தேவனால் சுவாசிக்கப்பட்டது" என்பதாகும். சுவாசம் மற்றும் ஆவிக்கான கிரேக்க வார்த்தைகள் ஒன்று தான். ஆகையால் வேதவாக்கியங்கள் எல்லாம் தேவனுடைய ஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறது என்பது தான் இதன் அர்த்தம்.

வேறு வார்த்தைகளில் சொன்னால், வேத வசனத்திற்குப் பின் இருக்கும் அதிகாரம், பரிசுத்த ஆவியானவரின் அதிகாரமே. இறுதியாக, அவர்தான் அதின் எழுத்தாளர். அவர் பல்வேறு வாய்க்கால்களையும், பல்வேறு கருவிகளையும் பயன்படுத்தினார். ஆனால் அவர்கள் எல்லோரின் பின்னணியிலும் பரிசுத்த ஆவியானவரின் அதிகாரம் இருக்கிறது, அவர் தேவனாகவே இருக்கிறார். ஆகையால் நாம் வேதத்தை எதிர்கொள்ளும்போது, தேவனுடைய அதிகாரத்தையே நாம் எதிர்கொள்கிறோம்.

## தேவனால் ஊக்குவிக்கப்பட்டது

மேற்க்காணும் வசனத்தைப் பார்க்கும்போது, வேதவாக்கியங்களில் சிலவற்றல்ல, எல்லாமே தேவனால் அருளப்பட்டது என்று சொல்கிறது. சில மக்கள் வேதத்தில் தேவனால் அருளப்பட்ட வசனங்களை,உண்மையான அதிகாரமில்லாதவை என்றுஅவர்கள் எண்ணுகிறவசனங்களிலிருந்து, பிரித்து விடுவார்கள். ஆனால் அது வசனத்திற்கே மாறானது. ஏனென்றால், பரிசுத்த ஆவியானவரே, வேத வாக்கியங்கள் எல்லாம் தேவனால் அருளப்பட்டவைகள் என்றும், வேதவாக்கியங்கள் எல்லாம் பயனுள்ளவைகள் என்றும் கூறுகிறார். வேறு விதமாக சொல்ல வேண்டுமானால்,

முக்கியமல்லவென்று எந்த புத்தகத்தையும் நீங்கள் விட்டு விடமுடியாது.

எஸ்றா, நெகேமியா போன்ற புஸ்தகங்கள் மிகமிக முக்கியமானவை. உன்னதபாட்டும் மிக முக்கியமானது. நாகூம் தீர்க்கதரிசியின் புஸ்தகமும் மிக முக்கியமானது. நீங்கள் பிரபலமாக அறியப்பட்டிருக்கிற ஒருசில வேத வசனங்களையே சார்ந்துகொண்டு, இவைகள் தான் தேவையானது என்று எண்ணிக்கொள்ளாதீர்கள், ஏனென்றால் அது சரி அல்ல.

நீங்கள் ஆயத்தமாக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டுமானால் முழு வேதத்தினாலும் ஆயத்தமாக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும். அதற்குப் பல ஆண்டுகள் செல்லும் ஆனாலும் அது முன்னேற்றத்திற்கானதாக அமையும். தேவனுடைய வார்த்தையை நீங்கள் வாசித்து, அதை உங்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தும்போது, நீங்கள் பெலத்தின் மேல் பெலன் அடையலாம். (சங்கீதம் 84:7) தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதின்படி செய்கிறதே அவருடைய அஸ்திபாரத்தின் மீது கட்டுவது என்று இயேசு சொன்னதை நினைவுக் கூறுங்கள். (மத்தேயு 7:24ஐ பார்க்கவும்). கேட்கிறது மட்டும் அல்ல, கேட்டு, அதின்படி செய்வது.

## விளக்கமளிப்பவர் ஒருவரே

வேதத்தின் விளக்கத்தை பொருத்த வரையிலும், அதின் அர்த்தத்தை எடுத்துச் சொல்ல அங்கீகரிக்கப்பட்ட ஒரே நபர், அதின் எழுத்தாளர் தான். எழுத்தாளராக என் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள

அநேக புத்தகங்களை நீங்கள் பார்க்கலாம். அவைகளில் எழுதப்பட்டிருக்கிறவைகள் என்னவென்று உங்களுக்குத் தெளிவாக புரியவில்லை என்றால், நான்தான் அதை விளக்கிச் சொல்வதற்கு மிகச் சிறப்பான நபர், ஏனென்றால் நான் என்ன எழுதினேன் என்பது எனக்குதான் தெரியும். நான் அதைச் சொல்ல வேண்டிய தெளிவோடு சொல்லாவிட்டாலும், நான் என்ன அர்த்தத்தில் எழுதினேன் என்று எனக்குத் தெரியும். அதேப்போல் வேதத்தின் எந்தப் பகுதியைக் குறித்தும் நீங்கள் அறிய விரும்பினால், அதின் எழுத்தாளரைக் கேளுங்கள். அவர் ஒருவர்தான் வேதத்தின் அர்த்தத்தைக் குறித்து உங்களுக்கு விளக்கம் சொல்வதற்கு அதிகாரம் பெற்றவர்.

பேதுரு இப்படியாக சொல்லுகிறார்:

> **வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.**
>
> **2 பேதுரு 1: 20-21**

எந்தத் தனிமனிதனும் வேதத்திற்கு விளக்கமளிக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் மட்டுமே அதை விளக்குவதற்கு அங்கீகாரம் பெற்றவர். பவுல் சுட்டிக் காட்டினதையே பேதுருவும் சுட்டிக் காண்பிக்கிறார்: வேதத்திற்குப் பின் இருக்கும் ஊக்கத்தின் ஆதாரம் பரிசுத்த ஆவியானவரே.

# மனிதனின் தவறக்கூடிய தன்மை

“வேதத்தை எழுதினவர்களில் அநேகர் பெலவீனரும், பிழைகள் நிறைந்த மனுஷராகவும் இருந்தார்கள், வேதத்திலே அவர்கள் பாவங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன” என்று நாம் மிகவும் நியாயமாக சொல்லலாம்.

வேதத்தை எழுதினவர்களின் பாவங்களை குறிப்பிடுவது, அதின் பிழையற்ற தன்மையின் அடையாளமாக இருக்கிறது. இன்று இருக்கும் அநேகர் தங்கள் பாவங்களை அமைதலாக மூடி மறைத்து, அவைகளை வெளியே வர விடாமல், தங்களைக் குறைவற்றவர்களைப் போல் சித்தரிப்பார்கள். வேதத்தின் எந்த எழுத்தாளரும் அதை செய்கிறதில்லை. சங்கீதங்களில் பெறும் பகுதியை எழுதின தாவீதுகூட, எல்லோரும் வாசிக்கும் வண்ணமாக தன் பெரும் பாதகங்களை எழுதி வைத்தார்.

அப்படியானால் வேதத்தை எழுதினவர்கள், பிழைகள் உள்ளவர்களாய் இருக்கையில், வேதம் எப்படி பிழையற்றதாய் இருக்க முடியும்? சங்கீதங்களில் இந்தக் கேள்விக்கு ஒரு அருமையான பதில் இருக்கிறது.

> **கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம்உருக்கி,புடமிடப்பட்டவெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது.**
>
> **சங்கீதம் 12:6**

ஜனங்கள் உலோகத்தை எப்படி சுத்தம் செய்வார்கள் என்ற சித்திரத்தை இப்பகுதியில் காண்கிறோம். களிமண்ணால் ஒரு உலையை உண்டாக்குவார்கள், அதில் நெருப்பைக் கொளுத்தி, சுத்திகரிக்கப்படும்படி அதில்

உலோகத்தை வைப்பார்கள். ஆகையால், அந்தக் காட்சியில் மூன்று பொருட்கள் இருக்கின்றன. 1) களிமண் உலை, இது மனித கருவியைச் சித்தரிக்கிறது, 2) அக்கினி, வெள்ளியைச் சுத்திகரிக்கின்ற அக்கினியான பரிசுத்த ஆவியானவர், 3) வெள்ளி – இதுதான் செய்தி. குறைவுள்ள ஆண்களும், பெண்களும், ஊக்குவிக்கப்பட்ட மற்றும் அதிகாரமுள்ள தேவனுடைய வார்த்தையை உருவாக்க எப்படி வாய்க்கால்களாக இருக்க முடியும் என்று இது நமக்கு காண்பிக்கிறது. களிமண், மனித பாத்திரமாய் இருக்கிறது. அக்கினி, பரிசுத்த ஆவியானவர். ஏழுதரம் புடமிடப்பட்ட, முற்றிலும் சுத்தமான வெள்ளி, தேவனுடைய செய்தியாக இருக்கிறது.

வேதத்தில் ஏழு என்ற எண் நம்மை இரண்டு உண்மைகளோடு இணைக்கிறது, ஒன்று பரிசுத்த ஆவியானவர், இரண்டாவது பூரணம். பூரணம் பரிசுத்த ஆவியானவராலேயே உண்டாகும். பெலவீனமான குறைவுள்ள மனிதர்கள் மூலம் வேதம் வந்தாலும், அது பரிசுத்த ஆவியானவரின் அக்கினியினால் ஏழுதரம் புடமிடப்பட்டிருக்கிறது. அது முற்றிலும் சார்ந்து கொள்ளக்கூடிய உண்மை.

## இயேசு மற்றும் வேத வாக்கியம்

வேதத்தின் அதிகாரம் மற்றும் வல்லமையை புரிந்துகொள்ள, வேதத்தைக் குறித்து இயேசுவின் மனநிலை எப்படி இருந்தது என்று நாம் கவனிக்க வேண்டும். ஏனென்றால் அவருடைய சீஷர்களாக இருக்கும் நமக்கு அவரே முன்மாதிரியாக

இருக்கிறார். இயேசு வேதத்தோடு எப்படி உறவு கொண்டார்? நமக்கு உதவியாய் இருக்கக்கூடிய ஒரு வேத வசனத்தை, யோவான் எழுதின சுவிசேஷத்தில் பார்ப்போம்:

> **தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க,**
>
> **யோவான் 10:35**

அந்த ஒரு வசனத்தில், தன்னைப் பின்பற்றுகிற எல்லோரும் அன்றிலிருந்து பயன்படுத்தும் இரண்டு தலைப்புகளை இயேசு அங்கே வேதாகமத்திற்கு கொடுக்கிறார்: ''தேவனுடைய வார்த்தை'' மற்றும் ''வேதம்.'' இயேசு, வேதாகமத்தை ''தேவனுடைய வார்த்தை'' என்று அடையாளப்படுத்தும்போது, அது தேவனிடத்திலிருந்து வருகிறதென்று கூறுகிறார். அது மனுஷனிடத்திலிருந்து தோன்றவில்லை. அது பரலோகத்திலிருந்து – தேவனிடத்திலிருந்து, வந்தது.

இயேசு ''வேதம்'' என்று சொல்லும்போது, எழுத்தில் பதிவு செய்யப்பட்டதென்று அர்த்தமாகும். தேவன் பல காரியங்களை ச் சொன்னார். அவைகள் எல்லாம் வேதத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் வேதத்தில் பதிவு செய்யப்பட்டதெல்லாம் நம்முடைய விசேஷ பயனுக்காகவே பதிவு செய்யப்பட்டுள்ளன. நம்முடைய இரட்சிப்புக்கென்று நாம் அறிய வேண்டிய எல்லாம் அவைகளில் உள்ளன.

ஆகையால் இயேசுவின் மனநிலை, ''வேதவாக்கியங்கள் தவறாது'' என்ற அச்சொற்றொடரில் அடங்கியுள்ளது. அந்த எளிய சொற்றொடரைவிட வேறு எந்த வார்த்தைகளும்

வேதத்தின் அதிகாரத்தைப் பூரணமாக எடுத்து காட்ட முடியாது. வேதவாக்கியம் தவறாது என்று நாம் விசுவாசித்தால், அதற்கு தேவன் நீங்கள் கணக்குக் கொடுக்க வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பார். உங்கள் வாழ்க்கையின் எல்லாப் பகுதியிலும் வேதத்தின் அதிகாரத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் எதிர்பார்ப்பார்.

## இயேசு வேதத்தை பயன்படுத்திய விதம்

வேதத்தை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதற்குத் திரும்பவும் இயேசுவே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். வனாந்திரத்தில் இயேசு சாத்தானால் சோதிக்கப்படும்போது நடந்தது என்ன என்று பார்ப்போம். 3ம் அதிகாரத்தின் முடிவில் அந்தச் சம்பவம் ஆரம்பிக்கின்றது. இயேசு யோவான் ஸ்நானகனால் யோர்தானில் எப்படி ஞானஸ்நானம் பெற்றார் என்பதைப் பதிவு செய்கிறது.

இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.

ஆங்கிலத்தில் இந்த வசனத்தை கவனித்துப் பார்த்தால் அதில், பரிசுத்த ஆவி அவர் மேல் தங்கினார் என்று எழுதப்பட்டிருக்கிறது. யோவான் 1:32–34ல் உள்ள இணை வசனங்களால் இது உறுதி செய்யப்படுகிறது;

பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல

வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவரென்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சிக் கொடுத்து வருகிறேன் என்றான்.

பரிசுத்த ஆவியானவர் நம்மில் சிலர்மீது அநேக நேரங்களில் இறங்கியிருக்கிறார். ஆனால் எப்போதுமே நம்மீது தங்கினதில்லை ஏனென்றால் நாம் சொல்லுகிற, செய்கிற அநேக காரியங்களால் பரிசுத்த ஆவியானவர் நம்மீது தங்க முடியாது. ஆனால், இயேசுவானவர் அந்த பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிற எந்தக் காரியத்தையும் சொல்லவோ செய்யவோ இல்லை.

இயேசுவின் ஞானஸ்நானத்திற்குப் பின், வானத்திலிருந்து ஒரு சத்தம் வந்தது, பிதாவாகிய தேவனுடைய சத்தம்:

> **இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். மத்தேயு 3:17**

நீங்களும் நானும் இந்தக் காரியம் நடந்த பிறகு இயேசுவுக்கு எல்லாம் சுலபமாக நடந்திருக்கும் என்று நினைக்க நாம் தூண்டப்படலாம். பிதா மற்றும் ஆவியானவர், இருவரின் அங்கீகாரம் அவருக்கு இருந்தது, தீர்க்கதரிசியாகிய யோவானின் அங்கீகாரமும் அவருக்கு இருந்தது. ஆனால் அப்படி நடக்கவில்லை.

பிதாவின் அறிவிப்பிற்கு அடுத்தது நடந்த காரியம் என்னவென்றால், நாற்பது நாள் உபவாசித்து, பிசாசினால் சோதிக்கப்பட, இயேசு வனாந்திரத்திற்கு வழிநடத்தப்பட்டார். ஆகையால் தேவனுடைய ஆசீர்வாதம் உங்கள் வாழ்வை எளிதாக்கிவிடுமென்று நினைக்காதீர்கள். உண்மையைச் சொன்னால், ஒரு விதத்தில் அது வாழ்க்கையை இன்னும் கடினமாக்கிவிட முடியும். ஏனென்றால் தேவன் அபிஷேம் பண்ணினவர்களை சாத்தான் பலமாய் எதிர்க்கிறான்.

லூக்காவின் சுவிசேஷத்தில் இயேசு ''பரிசுத்த ஆவியானவரால் வனாந்திரத்திற்குள் கொண்டுசெல்லப்பட்டார்'' (லூக்கா 4:1) என்று எழுதப்பட்டிருக்கிறது, ஆனால் நாற்பது நாட்கள் முடிந்த பின் ''பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு இயேசு வெளியே வந்தார்'' (லூக்கா 4:14) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் இரண்டும் வெவ்வேறான அனுபவங்கள். ஆவியானவரால் நடத்தப்படுவது ஒரு காரியம், ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் நடப்பதும், செயல்படுவதும் வேறொரு காரியம். சாத்தானை எதிர்கொண்டு, போராட்டத்தில் ஜெயிக்கும் வரை, இயேசு ஆவியின் வல்லமையில் செயலாற்றவில்லை.

ஓர் அளவிற்கு, அந்த சத்தியம் நமக்கும் உண்மையாக இருக்கும். நாம் சோதனையையும், எதிர்ப்பையும் மேற்கொண்டுதான் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் செயல்பட முடியும்.

மத்தேயு 4 இல் சோதிக்கிறவன், இயேசுவினிடத்தில் வந்தபோது, அவன் செய்த முதல் சோதனை, இயேசுவை சந்தேகிக்கும்படி

தூண்டினான். எப்போதுமே சாத்தானின் முதல் அசைவு அதுதான். அவன் உடனடியாக தேவனுடைய வார்த்தையை மறுக்க மாட்டான், அதைக் குறித்து கேள்விகளை எழுப்புவான். நீங்கள் அதை சந்தேகிக்கும்படி செய்வான். சபையின் சரித்திரத்தில் இதை எத்தனையோ முறை வெற்றிகரமாக பயன்படுத்தினதினால், அவன் வேறெந்த சூழ்ச்சியையும் தேடினதே இல்லை. ஆனால் நாம் அதை நம்மிடத்தில் கிரியை செய்ய அனுமதிக்கக்கூடாது.

மத்தேயு 4ம் அதிகாரத்தில் சாத்தான் இயேசுவிடம் சொன்ன முதல் வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> **அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். மத்தேயு 4 :3**

தேவன் பரலோகத்திலிருந்து பேசி, "இவர் என் நேச குமாரன்" என்று அப்போதுதான் சொல்லியிருந்தார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் தேவனிடத்திலிருந்து அவர் கேள்விப்பட்டதை சந்தேகிக்கும்படியாக சாத்தான் அவருக்கு சவால் விடுகிறான். "நீர் தேவனுடைய குமாரனானால், அதை நிரூபிக்க ஏதாவது செய்யும். இந்தக் கற்களை அப்பமாக்கும்'' என்று கூறுகிறான்.

> **அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.**
>
> **வசனம் 4**

சுவாரசியமானது என்னவென்றால், இயேசு சாத்தானுக்கு அளித்த மூன்று பதில்களும் உபாகம புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. இதில் இன்னும் ஆச்சரியமான காரியம் என்னவென்றால், இயேசுவோ, சாத்தானோ உபாகம புஸ்தகத்தின் அதிகாரத்தைக் கேள்வி கேட்கவில்லை. (ஆகையால் நாம் சந்தேகப்பட்டு, ஏன் நம்முடைய நேரத்தை வீணாக்க வேண்டும்?)

இப்படிதான் இயேசு ஒவ்வொரு சோதனையையும் சந்தித்தார்: எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி. சாத்தானோடு விவாதிக்கும் அளவிற்கு நாம் புத்திசாலிகள் என்று எண்ண வேண்டாம். அவன் நம்மைவிட அதிக சாதுரியம் உள்ளவன். இந்தத் தொழிலை பல ஆண்டுகளாக செய்து வருகிறான். நம்முடைய வாதங்களினால் அவனை இணங்க வைக்க முடியாது, ஆகையால் வேத வசனத்தினால் அவனை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

இயேசு சோதிக்கப்பட்ட ஒவ்வொரு முறையும், "எழுதியிருக்கிறபடி... எழுதியிருக்கிறபடி... எழுதியிருக்கிறபடி..." (வசனங்கள் 4,7,10) என்று அவனை மேற்கொண்டார். இயேசு அதைச் சொன்னபோதெல்லாம் சாத்தான் பேசிக்கொண்டிருந்த விஷயத்தை மாற்றினான். வேத வசனத்திற்கு அவனிடத்தில் பதில் இல்லையென்று அவன் அறிந்திருந்தான். ஆகையால் சாத்தானை உங்கள் இறையியலினாலேயோ, தத்துவ ஞானத்தினாலேயோ மேற்கொள்ள ஆசைப்படாதீர்கள். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அவனுக்குப் பதில் கொடுங்கள்.

## முதல் சோதனை

ஏவாள் செய்த தவறை இயேசு செய்யவில்லை. மனித சரித்திரத்தின் ஆரம்பத்தில், ஆதியாகமம் 3ம் அதிகாரம் முதல் ஒரு சில வசனங்களில் இப்படியாக வாசிக்கிறோம்:

> **தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டுஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஆதியாகமம் 3:1**

முதற்முதல் ஏவாளை என்ன செய்ய சர்ப்பமானது தூண்டியது? சந்தேகிக்க. சந்தேகம் வந்துவிட்டால், அடுத்தபடி அவிசுவாசம். அவிசுவாசம் வந்துவிட்டால், அடுத்தபடி கீழ்ப்படியாமை. அதை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். நாம் சந்தேகத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது.

சாத்தானை அவனுடைய தளத்திலேயே சந்திக்க முடியும் என்று ஏவாள் தவறாக எண்ணினாள். அவள், "தோட்டத்திலுள்ள எல்லா விருட்சத்தின் கனிகளையும் நாங்கள் புசிக்கலாம்," என்றாள் – சில தடைகள் இருந்ததை அவளுக்கு ஒத்துக்கொள்ள மனதில்லை, "தோட்டத்தின் நடுவில் இருக்கும் விருட்சத்தின் கனிகளை தவிர" என்று பதிலளித்தாள், அதுதான் நன்மை தீமை அறியத்தக்க விருட்சம். அதைக் குறித்து அவள், "தேவனாகிய கர்த்தர் சொல்லியிருக்கிறார், 'அதைத் தொடவோ அதின் கனியைப் புசிக்கவோ வேண்டாம், புசித்தால் மரிப்பீர்கள்'" (வசனம் 3) என்று சொன்னாள். பிசாசின் பதிலைப் பாருங்கள்.

**அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; (வசனம் 4)**

பிசாசு, கேள்வி கேட்டு துவங்குவான், ஆனால் அதைத் தொடர்ந்து மறுதலிப்பான். கடந்த நூற்றாண்டில் சபையின் சரித்திரத்தை படிப்பீர்களானால், எந்த பிரசங்கியாரையோ, இறையியல் நிபுணரையோ, சாத்தான் வேதத்தை கேள்வி கேட்கும்படி செய்தானோ, அவர்களை எப்போதுமே மறுதலிக்கும் நிலைக்கு அவன் கொண்டு வந்திருக்கிறான் என்று காண்பீர்கள். அந்த சருக்கலான, கீழ்நோக்கும் பாதையில் நீங்களும் பயணத்தை ஆரம்பிக்காதீர்கள். வேதம் அதிகாரமுள்ளது. அது தேவனுடைய வார்த்தை. அதை ஏற்றுக்கொள்ளுங்கள். அதின்படி வாழுங்கள். அதினாலே பிசாசுக்குப் பதில் கொடுங்கள். அவனால் தேவனுடைய வார்த்தைக்குப் பதில் அளிக்க முடியாது.

பவுல் சொல்லுகிறார்:

**தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.**

**எபேசியர் 6:17**

வசனம் அல்லது வார்த்தை என்பதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் உண்டு. ஒன்று லோகோஸ் (logos), மற்றொன்று ரேமா (rhema), லோகோஸ் (logos), தேவனுடைய முழுமையான, நித்திய ஆலோசனை. ரேமா (rhema) தேவனுடைய பேசப்பட்ட வார்த்தை. எபேசியர் 6:17இல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் பிசாசை சந்திக்கும் போது, தேவனுடைய வார்த்தையைப் பேசிதான் அவனைச் சந்திக்க வேண்டும்.

வேதம் உங்கள் புத்தக அலமாரியில் இருந்தாலோ, உங்கள் படுக்கையின் அருகிலுள்ள மேஜையின் மேல் இருந்தாலோ உங்களை பாதுக்காக்காது. நீங்கள் அதை அறிக்கையிடும் போது மட்டுமே அது கிரியை செய்கிறது. உங்கள் வாயில் அந்த வார்த்தைகளை எடுத்து, உங்களுக்காக நீங்களே சொல்லவேண்டும். அப்போது அது கூர்மையான, கருக்குள்ள பட்டயமாக மாறுகிறது, பிசாசு அதைக் கண்டு பின்வாங்குகிறான். அதற்கு அவனிடத்தில் பதில் இல்லை.

## வார்த்தையின் அதிகாரம்

எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தைக் குறித்து இயேசு என்ன சொன்னார் என்பதைப் பார்ப்போம். நான் சொன்னது ஞாபகம் இருக்கிறதா? வேதவசனம் என்பது எழுதப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தை. இயேசு சொன்னார்:

> **நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**
>
> **மத்தேயு 5:17-18**

சிறு எழுத்து – ஆங்கிலத்தில் jot – என்பது தற்கால எபிரேயத்தில் ‘‘யோத்’’ (yodh) என்பதாகும், அது எபிரேய எழுத்துக்களிலேயே மிக சிறிய எழுத்து. எழுத்தின் உறுப்பு என்பது, ஒரே மாதிரியான இரண்டு எழுத்துக்களை வித்தியாசப்படுத்துவதற்கு போடப்படுகிற ஒரு சிறிய சுழி. ஆகையால், எழுதப்பட்டிருக்கிற வேதத்தில், இவை இரண்டும் எல்லா எழுத்துக்களைக் காட்டிலும் மிகமிக சிறிய எழுத்துக்கள். இயேசு இவைகளில் ஒன்றாகிலும் என்றென்றும் ஒழிந்து போவதில்லை என்று சொன்னார்.

எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையின் சர்வாதிகாரத்தை இயேசு ஏற்றுக்கொண்டார் என்பதை இது காண்பிக்கிறது. பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் குறித்து அவர் அப்போது சொல்லவில்லை. ஏனென்றால் சிறிய எழுத்து, எழுத்தின் உறுப்பு என்பது எழுதப்பட்டிருக்கும் காரியங்களை குறித்துதான் சொல்லப்படுகிறது. ஆகையால் இயேசு எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையின் முழுமையான அதிகாரத்தை உறுதி செய்தார்.

அவருடைய ஊழியத்தின் முடிவுக்கு சற்று முன், இயேசு சதுசேயரை எதிர்கொண்டார். உண்மையைச் சொன்னால், இவர்கள் அந்நாட்களின் தாராண்மைவாதிகள் – எல்லா வேத வசனங்களின் அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள். அவர்கள் வெறும் வேதத்தின் பென்டாட்டியூக் (Pentateuch) என்று அழைக்கப்படும் முதல் ஐந்து புஸ்தகங்களின் அதிகாரத்தை மட்டும் ஏற்றுக்கொண்டார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டென்கிற போதனைக்கு சவால் விடுத்தார்கள். இயேசுவிடம்

ஒரு சாமர்த்தியமான கேள்வியோடு வந்தார்கள், இயேசு இப்படியாக அவர்களுக்குப் பதிலளித்தார்:

> **மேலும் மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா? தேவன் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார் என்றார். மத்தேயு 22:31-32.**

அந்த வசனத்தை இயேசு எப்படி பயன்படுத்தினார் என்பதை கவனித்து பாருங்கள். அவர் மேற்க்கோள் காட்டியது, மோசேயினால் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட வார்த்தைகள். மோசேயிடம் தேவன் நேரடியாக பேசின வார்த்தைகள். ஆனால் இயேசு அவைகளை எடுத்துச் சொல்லும்போது பதிநான்கு நூற்றண்டுகளுக்குமுன் மோசேக்கு சொல்லப்பட்ட வார்த்தைகளைப் போல் அவைகளைக் குறித்துப் பேசவில்லை. மாறாக, அவர், “தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா?” என்று சொன்னார். இவ்விஷயத்தில் இயேசு தேவனுடைய வார்த்தையை எப்படி முன்வைத்தார் என்பது, இன்று நமக்கு வல்லமையான ஒன்றை வெளிப்படுத்துகிறது. வேதம் என்றும் பழைமையாய் போவதில்லை. இது மனிதனின் சாதுரியத்தின் பதிவேடு அல்ல. அது மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டிருந்தாலும் இன்றைக்கு தேவன் நம்மோடு பேசுகிறதாய் இருக்கிறது. இயேசு புரிந்து கொண்ட வேதத்தின் அதிகாரம் இதுவே.

# வேதத்தின் நிறைவேறுதல்

இயேசு வேத்தை எப்படி புரிந்துகொண்டு பயன்படுத்தினார் என்பதுடன், இயேசுவின் வாழ்க்கை வேதத்தை எப்படி நிறைவேற்றியது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புதிய ஏற்பாடு முழுவதையும் நாம் ஆராய்ந்தால், 18முறை இயேசுவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைக் குறித்து "வேத வாக்கியங்கள் நிறைவேறும்படியாக" என்று எழுதப்பட்டிருக்கிறதை நாம் காணலாம். வேறுவிதமாக சொன்னால், அவர் வேதத்தை விசுவாசித்தது மட்டுமல்ல, வேதத்தை அறிக்கையிட்டது மட்டுமல்ல, தன் வாழ்க்கை முழுவதிலும், வேதத்திற்கு அவர் கீழ்ப்படிந்தார். அவருடைய முழு வாழ்க்கையும் வேதத்தின் செயல்பாடாகவே இருந்தது.

இந்த சத்தியத்தை உறுதி செய்யும், அவருடைய வாழ்க்கையின் பல அம்சங்களை நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், இப்புத்தகத்தில், நம்முடைய நோக்கங்களுக்காக மற்றும் ஆராய்வுக்காக, நாம் நான்கை மட்டும் எடுத்துக்கொள்வோம். அவருடைய பிறப்பு, அவர் மனிதனாக வாழ்ந்த வாழ்க்கை, அவருடைய மரணம், அவருடைய உயிர்த்தெழுதல். இவைகள் எல்லாவற்றையும் குறித்து, ''வேதவாக்கியங்கள் நிறைவேறும்படியாக நடந்தது'' என்று வேதம் சொல்லுகிறது. (மத்தேயு 1:22; 12:17; 27:35; லூக்கா 24:44ஐ பாருங்கள்.) தன் வாழ்க்கையின் நிகழ்வுகளைக் கொண்டு, வேதத்தின் அதிகாரத்தை இதைக் காட்டிலும் பலமான வேறெந்த வழியிலும் இயேசு உறுதி செய்திருக்க முடியாது.

# வேதத்தின் பின்னணியில் இருக்கும் அதிகாரம்

புதிய ஏற்பாட்டின் பகுதிகளை நாம் படிக்கையில், ஒரு முக்கியமான கேள்வியை எடுத்துரைப்போம். புதிய ஏற்பாட்டுக்குப் பின் இருக்கும் அதிகாரம் என்ன? உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம், ஆனால் பழைய ஏற்பாட்டுக்குப் பின் இருக்கும் அதே அதிகாரம் தான் இதற்கும் இருக்கிறது. குறிப்பாக, இயேசு தம்முடைய சீஷரோடு பேசின இரண்டு பகுதிகளை நாம் பார்ப்போம்.

இவைகளில், முதல் பகுதியில் இயேசு சீஷர்களிடமிருந்து விடை பெறுகிறார். அவர் போகப்போகிறார் என்கிற உண்மையை ஏற்றுக்கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துகிறார்.

நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

> **என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். யோவான் 14:25-26**

ஆகையால் அப்போஸ்தலர்கள் எழுதின எல்லாவற்றுக்குப் பின்னும், பரிசுத்த ஆவியானவரின் அதிகாரம் இருக்கிறது. அவர் இரண்டு காரியங்களைச் செய்வார் என்று இயேசு சொன்னார்: முதலாவது, இயேசு போதிக்காததை அவர் போதிப்பார். இரண்டாவதாக, இயேசு சொல்லி அவர்கள் மறந்தவைகளையும் பரிசுத்த ஆவியானவர் அவர்ளுக்கு நினைப்பூட்டுவார்.

ஆகையால் சுவிசேஷங்களின் செய்தி மனிதனுடைய ஞாபக திரனை சார்ந்திருக்கவில்லை, பரிசுத்த ஆவியானவரின் சத்தியத்தையே சார்ந்திருக்கிறது.

தொடர்ந்து போகையில், மறுபடியும் இதே சத்தியத்தை இயேசு வெளிகொண்டுவருகிறார். தம்முடைய சீஷர்களிடத்தில் கூறுகிறார்:

இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்.

> **சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். யோவான் 16:12-13**

இயேசு இலக்கணத்தின் விதிகளைத் தகர்த்து, பரிசுத்தஆவி, "அவராக" இருக்கிறார் "அது" அல்ல என்பதை அழுத்தமாக சொல்லுகிறார் என்பதை நான் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன். கிரேக்க இலக்கண விதிகளின்படி அவர் "அது" என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இயேசுவோ "அவர்" என்று சொல்லுகிறார். தெளிவாக சொன்னால், பரிசுத்த ஆவி "அது" என்பது மட்டும் அல்ல, அவர் ஒரு நபராக இருக்கிறார். அவரோடு ஒரு நபராக நாம் உறவு வைத்துக்கொள்ள வேண்டும்.

மறுபடியும் இயேசு, உற்சாகப்படுத்தும் ஒரு உண்மையை உறுதி செய்கிறார்: நமக்குத் தேவையானதும், இதுவரை நாம்

பெற்றுக்கொள்ளாததுமான போதகத்தை பரிசுத்த ஆவியானவர் மூலமாய் நமக்கு வரும்.

இப்பகுதியில் நாம் தொடர்ந்து போகையில், அடுத்த வசனம் கூறுகிறது:

**அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். [வசனம் 14]**

பரிசுத்த ஆவியானவரின் இன்னொரு முக்கியமான குணாதிசயத்தை உங்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது என்னவென்றால், அவர்எப்போதுமேஇயேசுவை மகிமைப்படுத்துகிறார். தேவனை மகிமைப்படுத்தாத அல்லது ஒரு மனுஷனையோ, வேறெந்த திசையிலோ மகிமையை செலுத்தும் ஆவிக்குரிய செயல்பாடுகளையோ, கிரியைகளையோ நீங்கள் எதிர்கொள்ள நேரிட்டால், அது பரிசுத்த ஆவியானவரால் உண்டானதல்ல என்பதை நினைவுகூறுங்கள். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரின் முதன்மையான ஊழியம், இயேசுவை வெளிப்படுத்தி, அவரை மகிமைப்படுத்துவதுதான்.

நாம் ஆவிகளை சோதித்துப் பார்க்க வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது (1 யோவான் 4:1), இது ஒரு நல்ல வழி. ஒரு வார்த்தை அல்லது கிரியை, பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து வந்ததா என்று நீங்கள் அறிய ஒரு சிறந்த சோதனை என்னவென்றால்: இது இயேசுவை மகிமைப்படுத்துமா? என்று கேட்பதாகும். இல்லையென்றால், அது கேட்பதற்கு

நலமாக தோன்றினாலும், ஆவிக்குரியதாக தோன்றினாலும், பலமான, உறத்த குரலில் கூறப்பட்டலும், அது பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து வந்ததல்ல. ஏனென்றால் அவர் இயேசுவைத் தவிர வேறொருவரையும் மகிமைப்படுத்தமாட்டார். மனிதர்கள் எப்போது மகிமையை எடுத்துக் கொள்ள ஆரம்பிக்கிறார்களோ, பரிசுத்த ஆவியானவர், "மன்னியுங்கள், நான் போக வேண்டும். நீங்கள் தொடரலாம். ஆனால் நான் இங்கே இருக்க முடியாது" என்று சொல்லுவார்.

இப்படித்தான் என்னுடைய நினைவில் அநேக ஊழியங்கள் வழி தவறி சென்றிருக்கின்றன. பரிசுத்த ஆவியானவர் இயேசுவுக்கு மட்டும் கொடுக்கும் மகிமையை மனிதர்கள் எடுத்துக்கொண்டதினாலே, அழிந்து போன ஊழியங்களை நான் எண்ணி கணக்கிட முடியாது. நாம் அதைக் குறித்து எப்போதும் மிகவும் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். நான் இடைவிடாமல் என்னை ஆராய்ந்து பார்க்கிறேன். நான் இயேசுவுக்கு மகிமையைக் கொடுக்கிறேனா அல்லது டெரிக் பிரின்ஸோ, நம்மில் ஒருவரோ ஒரு முக்கியமான நபர் என்பதை ஜனங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமா என்பதை நாம் தொடர்ந்து ஆராய வேண்டும்? டெரிக் பிரின்ஸ் தேவ கிருபையினால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவி தான் – உங்கள் ஒவ்வொருவரைக் குறித்தும் இதுவே உண்மை.

இயேசு ஒருவர் தான் மகிமையை பெற்றுக்கொள்ள பாத்திரர். அந்த சத்தியத்தை நமக்கு நினைப்பூட்டுவது பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும்.

# வேத வசனத்தின் தன்மை

அடுத்து மிகவும் சுவாரசியமான மற்றும் முக்கியமான தலைப்புக்கு கடந்து போவோம், தேவனுடைய வார்த்தையின் தன்மை. தேவனுடைய வார்த்தையின் தன்மையைக் குறித்து எபிரேயரில் நமக்கு ஒரு பகுத்தாய்வு கிடைக்கிறது:

> **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. எபிரேயர் 4:12**

எபேசியர் 6:17ல், நாம் முன்பு சுட்டிக் காண்பித்தது போலவே, மறுபடியும் தேவனுடைய வார்த்தை பட்டயத்தோடு ஒப்பிடப்பட்டிருக்கிறதை நீங்கள் கவனிக்கலாம். வார்த்தை ஒரு பட்டயம்.

மேலும், தேவனுடைய வார்த்தை மரித்தது அல்ல, அது ஜீவனுள்ளது. தேவனுடைய வார்த்தை, வெள்ளைத் தாளில் போடப்பட்டிருக்கும் கருப்பு குறிகள் அல்ல. அது பிரசங்கியாரின் வாயிலிருந்து வரும் சத்தங்கள் அல்ல. அது உயிரோடிருக்கிறது. அது ஜீவனுள்ளது. அது எங்கு வந்தாலும், ஜீவனைக் கொண்டுவருகிறது. தேவனுடைய வார்த்தை ஜீவனும், வல்லமையும் உடையதாக இருக்கிறது. அது வல்லமையுள்ளதாக இருப்பதற்காக, தேவனுக்கு நன்றி! உலகத்தில் நிரம்பியிருக்கும் சாத்தானுடைய எல்லா பொய்களைவிட இது வல்லமையுள்ளது.

தேவனுடைய வார்த்தையே எல்லாவற்றுக்கும் இறுதி விடை.

அடுத்ததாக, நம்மீது தேவனுடைய வார்த்தையின் விளைவுகளை குறித்து வாசிக்கிறோம். அப்பகுதி கூறுகிறது; ''ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும்.'' இது மிகவும் சுவாரசியமானது. மனிதன் ஒரு திரியேக ஜீவன் என்று வேதம் வெளிப்படுத்துகிறது: ஆவி, ஆத்துமா, சரீரம். உண்மையில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு திரியேக ஜீவன்தான் மனிதன். ஆனால் ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் வித்தியாசப்படுத்துவதைக் கற்றுக்கொள்ள, தேவனுடைய வார்த்தையினால் மட்டும் ஆகும். ஆத்துமாவுக்குரியதை, ஆவிக்குரியதினின்று பிரிக்கத்தக்க கூர்மையான ஒரே கருவியாக அது இருக்கிறது.

இது மிக முக்கியமானது. ஏனென்றால் நாம் புதிய ஏற்பாட்டில் படிப்பதுபோல, ஆத்துமாவுக்கடுத்தவைகள் பல விதங்களில் ஆவிக்குரியவைகளுக்கு எதிர்த்து நிற்கிறது. உதாரணத்திற்கு, 1 கொரிந்தியர் 2இல் பவுல் ஆத்துமாவுக்குரியவனாக வாழுகிற மனுஷன் தேவனுடையவைகளை பெற்றுக் கொள்வதில்லை. ஏனென்றால் அவைகள் ஆவிகேற்றபடி ஆராய்ந்து நிதானிக்கப்படுகின்றன என்று கூறுகிறார் (14ம் வசனத்தைப் பார்க்கவும்). ஆகையால் ஆத்துமாவுக்கடுத்தது எது, ஆவிக்குரியது எது என்று வித்தியாசப்படுத்த கற்றுக்கொள்வது மிக முக்கியமானது. ஆனால்

தேவனுடைய வார்த்தை மட்டும்தான் அதைச் செய்ய கூடியது.

தேவனுடைய வார்த்தை கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாயும் இருக்கிறது. வேறு விதமாக சொன்னால், அறுவைசிகிச்சை நிபுணரின் கருவிகள் நுழைய முடியாத, மன நல மருத்துவரின் ஆய்வு ஊடுருவ முடியாத எந்த இடத்திலும், வேதம் ஊடுருவ கூடியதாய் இருக்கிறது. மனித தன்மையின் ஆழங்களுக்குள் நம்மை அழைத்துச் செல்லுகிற ஒரே கருவி வேதம் தான்.

வெளிப்பாடுகள் நிறைந்த இந்தப் பகுதியில், நாம் அடுத்துப் பார்ப்பது, தேவனுடைய வார்த்தை, ''இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.'' வகையறுக்கிறது என்பதற்கு பகுப்பாய்வு செய்தல் என்று பொருள், ஒரு பொருளின் உண்மைத் தன்மையைக் கண்டறிவது. நான் ஒரு இளம் விசுவாசியாக இருந்த போது எனக்கு யாரோ ஒருவர் சொன்ன காரியம் இன்னும் நினைவில் உள்ளது, "நீ வேதாகமத்தை வாசிக்கும் போது, உன் வேதாகமமும் உன்னை வாசித்துக்கொண்டிருக்கிறது." இது இருவழி பரிவர்த்தனை.

இது எனக்கு மிக தெளிவாக இருந்தது. ஏனென்றால் நான் வேதத்தை ஒரு தத்துவ வேலைப்பாடாகக் கருதி, தொழில்முறை தத்துவவாதியாக, வேதத்தை வாசிக்க ஆரம்பித்தேன். தொடர்ந்து வாசிக்க வாசிக்க, மிகவும் சாரமில்லாத ஒன்றாக அதைக் கண்டேன். எந்தப் புஸ்தகமும் என்னைத் தோற்கடிக்க

முடியாது என்ற உறுதி மட்டுமே என்னைத் தொடர்ந்து வாசிக்கச் செய்தது.

ஆனால், வாசிக்க வாசிக்க என்னை குறித்து வித்தியாசமாக உணர ஆரம்பித்தேன். அந்நேரம் வரைக்கும் எல்லாவற்றுக்கும் என்னிடத்தில் விடை இருந்ததென்று நினைத்தேன் – தத்துவம் எல்லாவற்றுக்கும் ஒரு தீர்வைக் கொடுக்கும் என்று எண்ணினேன். ஆனால் வேதத்தை வாசிக்க வாசிக்க எனக்குள் இருந்த சுய-நம்பிக்கை குறைய ஆரம்பித்தது.

எனக்கு என்ன நடக்கிறதென்று புரியவில்லை. அப்போது எனக்கு இருபத்தைந்து வயது கூட ஆகவில்லை. என் காலத்துக்கு முன்பாகவே நான் கிழவனாகிறேன் என்று எண்ணினேன். வேதத்தை நான் வாசிக்கும்போது, வேதம் என்னை வாசித்துக்கொண்டிருந்ததை நான் உணரவில்லை.

இறுதியில், பெல்ஷாத்சார் பண்டிகையின் முடிவிலே, சுவற்றில் எழுத்துக்கள் தோன்றி, “நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்” (தானியேல் 5:27) என்று வாசித்ததுபோல் எனக்கு இருந்தது. என் தற்பெருமை, அகந்தை, என் அறிவுப்பூர்வமான தன்னம்பிக்கை, எல்லாம் வேதத்திற்கு முன் வாடிபோக ஆரம்பித்தது. அந்த நேரத்தில் நான் இன்னும் விசுவாசியாதிருந்த சூழ்நிலையில், அது தொடர்ந்து கிரியை செய்து கொண்டிருந்தது. ஆகையால் வேதத்தை நீங்கள் வாசிக்கும்போது, வேதம் உங்களை வாசிக்கிறதென்று நினைவுகூறுங்கள்.

## வேதம் நம்மில் கிரியை செய்கிறது

வேதம் என்ன செய்யும் என்ற இன்னும் ஒரு குறிப்புக்காக, நாம் 1 தெசலோனிக்கேயரை திருப்பிக்கொள்வோம். சுவிசேஷத்தின் செய்திக்கு அற்புதமான விதத்தில் இடம் கொடுத்த தெசலோனிக்கேய விசுவாசிகளுக்கு பவுல் எழுதுகிறார். அவர்களுக்கு அவர் சொல்லுகிறார்:

> **ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.**
>
> **1 தெசலோனிக்கேயர் 2:13**

நாம் வேதத்தை எப்படி பெற்று கொள்ளுகிறோம் என்பது ஒரு விதத்தில், வேதம் நமக்குள் என்ன செய்யும் என்பதைத் தீர்மானிக்கும். அதை மனுஷனுடைய வார்த்தையைப் போல் பெற்றுக் கொள்வீர்களானால், அது உங்களுக்குள் தன் முழு கிரியையும் செய்யாது. ஆனால் தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொண்டால், உங்களில் பயனுள்ள கிரியையை நடப்பிக்கும்.

நீங்கள் வேதத்தை வாசிக்கும்போது, நேரம் எடுத்து, ஆண்டவரை பார்த்து, “இது உம்முடைய வார்த்தை என்று விசுவாசிக்கிறேன். உம்முடைய வார்த்தையாக பெற்றுக்கொள்ளுகிறேன்.

எனக்குள் எதைச் செய்ய அனுப்பினீரோ அதையெல்லாம் என்னுடைய ஜீவியத்தின் எல்லாப் பகுதியிலும் — ஆவி, ஆத்துமா, சரீரத்திலும் செய்து முடிக்கட்டும் — ஏனென்றால் அதை நான் விசுவாசிக்கிறேன்" என்று சொல்லுங்கள்.

## நமக்கு தேவையான யாவும்

வேதத்தில் எங்குமுள்ள வாக்கியங்களில், பேதுரு ஒரு குறிப்பிடத்தக்க வாக்கியத்தை சொன்னார். அப்போஸ்தலர்கள் மிக நீண்ட வாக்கியங்களை எழுதினர். இந்தச் சத்தியம் அப்படிப்பட்ட ஒரு வாக்கியத்தின் நடுவில் வருகிறது. (ஆங்கிலத்தில் பொதுவாக இவைகளைப் பிரித்து விடுவோம்.)

> **தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,**
>
> **2 பேதுரு 1:3**

அது ஆச்சரியமான ஒரு வாக்கியம்! தேவனுடைய தெய்வீக, சர்வ வல்லமையானது, நமக்குத் தேவையாக இருக்கப் போகும் எல்லாவற்றையும் நமக்கு ஏற்கெனவே கொடுத்திருக்கிறது என்று அவ்வாக்கியம் கூறுகிறது! நீங்கள், "ஆண்டவரே அதைக் காணோமே, எங்கே இருக்கிறது?" என்று கேட்கலாம். அடுத்த வசனம் சொல்லுகிறது:

**இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.**

**வசனம் 4**

ஆகையால் ஜீவனுக்கும் தேவபக்திக்கும் தேவையான யாவற்றையும் தேவன் நமக்கு தந்துவிட்டார் என்று இப்பகுதியில் காண்கிறோம். அவைகள் வாக்குத்தத்தங்களில் உள்ளன. நானே இந்த வாக்கியத்தை வடிவமைத்துள்ளேன்: "தேவைகளைச் சந்திக்கும் ஏற்பாடு வாக்குத்தத்தத்தில் இருக்கிறது." ஆகையால், தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் யாவையும் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், நீங்கள் அதை அவருடைய வாக்குத்தத்தங்களின் மூலம் தான் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் உங்களுக்குத் தேவையாக இருக்க போகும் யாவும் அவைகளில்தான் உள்ளன.

## தெய்வீக சுபாவத்தின் பங்காளர்கள்

ஆனால், வாக்குத்தத்தங்களுடன், இயேசுவை அறிகிற அறிவினாலும் அந்த ஏற்படுத்தப்பட்டவைகள் வருகின்றன. ஏனென்றால் வேதம் இயேசுவை வெளிப்படுத்துகிறது. இங்கு ஓர் ஆச்சரியமான வாக்கியம். (இது வேதத்தில் மிகத் தெளிவாக கொடுக்கப்படாவிட்டால் நான் இதை சொல்ல துணியமாட்டேன்.) வாக்குத்தத்தங்களில் பங்கேற்பதின் நிமித்தமாகவே, நாம் இச்சையினால்

உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்ய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக மாற முடியும்.

இன்று நாகரீகமாக தோன்றி அநேகரைக் கொல்லும், விநோதமான போதனைகள் இருப்பதினால் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தொடர்ந்து சரியானதைச் செய்து, அதைப் போதுமான கால அளவிற்கு செய்தால், நீங்கள் தேவர்கள் ஆகலாம் என்று அது போதிக்கின்றது. இதை நீங்கள் எதிர்க்கொண்டிருக்கலாம். அந்த உபதேசத்திற்கு புதிய யுகம் என்று பெயர். இந்து மற்றும் கிழக்கத்திய மதங்களின் தத்துவத்தை அதிகமாக உட்படுத்துகிற புது யுகத்தின் போதனை, நீங்கள் போதுமான காலம் வரை தொடர்ந்து செயல்பட்டால், நீங்கள் தேவர்களாகலாம் என்று கூறுகிறது. (மார்மோன்களும் இதையே கூறுகிறார்கள், முதலில் வெளியரங்கமாக செய்யாவிட்டாலும், பின்பு அதைச் செய்கிறார்கள்.)

இது வெளியரங்கமாக தவறானது. அதற்கான அடிப்படையான ஒரு காரணத்தை சொல்லுகிறேன். தேவன் சிருஷ்டிக்கப்படாதவர்; நாம் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். சிருஷ்டிக்கப்பட்டது ஒருபோதும் சிருஷ்டிக்கப்படாததாக மாற முடியாது. இது ஒரு வஞ்சகம். ஆனால் வாக்குத்தத்தங்களைப் பெற்று, அவைகளைப் பயன்படுத்தும்போது, நாம் தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவர்களாக மாறலாம்.

இவ்விஷயத்தில், நான் எப்போதும் யாக்கோபின் ஏணியைக் குறித்து நினைப்பேன். அவனுடைய கனவு உங்களுக்கு நினைவு இருக்கும். அவன் தனியாக வனாந்திரத்தில், கல்லை தலையணையாக வைத்துத் தூங்கினான்.

யாக்கோபு தூங்கினபோது, அவன் ஒரு தரிசனத்தைக் கண்டான் –அவன் கனவில், பரலோகத்தை எட்டுகிற ஒரு ஏணி இருந்தது. அதின் கால் பூமியில் இருந்தது, அதின் மேல்புறம் பரலோகத்திலிருந்தது. தேவதூதர் அதில் ஏறி இறங்கிக்கொண்டிருந்தார்கள். இயேசுவே அதின் மேலே நின்று அக்கனவில் யாக்கோபோடு பேசினார்.

வேதம் ஒரு விதத்தில் யாக்கோபின் எணியை போல் இருக்கிறது. ஒவ்வொரு வாக்குத்தத்தமும், அந்த ஏணியில் ஒரு படியாக உள்ளது. ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு வாக்குத்தத்தத்தை சொந்தமாக்கிக் கொள்ளும்போதும், ஒருபடி மேலே உயருகிறீர்கள். இறுதியில், அது உங்களை பரலோகம் கொண்டு செல்லும்.

ஆகையால் உங்கள் வேதத்தை ஒரு போதும் அசட்டை செய்யாதீர்கள். உங்கள் நலனுக்கும், உங்கள் வெற்றிக்கும் இதுவே திறவுகோல். தேவன் நமக்குக் கொடுத்த மிக விலையுயர்ந்த ஈவு அதுவே.

நமக்கு இன்று அநேக வேதாகமங்களும் மொழிபெயர்ப்புகளும், குறிப்புகள் உள்ள வேதாகமங்களும் உள்ளன. ஆனால் வேதத்தை ஒரு முறை கூட திறந்து பார்க்காத இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள் என்பதை மனதில்கொள்ள வேண்டும். அவர்களுக்கு வேறு வழி இல்லை. இன்னொன்றையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும், கடந்த நூற்றாண்டுகளில், வேதத்தை உங்களுக்காகவும், எனக்காகவும் பாதுகாக்க அநேக ஆண்களும் பெண்களும் தங்கள் ஜீவனையே தியாகம் செய்திருக்கிறார்கள்.

ஆகையால் அதை பயபக்தியாய் எண்ணுவோம். வேதத்தை நாம் மதிக்க கற்றுக்கொள்வோம். ஏனென்றால், தேவன் நம்முடைய வாழ்வில் வரும் அநேக விதங்களில், இதுவும் ஒன்று.

## தேவனுடைய வார்த்தையின் விளைவுகள்

மிகுந்த உற்சாகமூட்டும் ஒரு தலைப்பை இப்போது நாம் கையாள்வோம்: தேவனுடைய வார்தையின் விளைவுகள். பவுல் தெசலோனிக்கேயரிடம், நாம் வேதத்தை விசுவாசிக்கிறபடியினால் அது நமக்குள் பலன் செய்கிறது என்று சொன்னார் (1 தெசலோனிக்கெயர் 2:13). ஆகையால் தேவனுடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தக் கூடிய ஒன்பது விளைவுகளை உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன் – தேவனுடைய வார்த்தை உங்களுக்காகவும், எனக்காகவும் செய்யக் கூடியவைகளின் ஒன்பது அம்சங்கள்.

### 1. விசுவாசம்

முதலாவது ரோமரின் நிரூபத்தை பார்ப்போம்:

> **ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.**
>
> **ரோமர் 10:17**

அது அருமையான ஒரு வசனம். அது எனக்கு மிகவும் அர்த்தமுள்ளது. ஏனென்றால் வடக்கு ஆப்பிரிக்காவின் வனாந்திரங்களில் கிட்டதட்ட ஒரு வருஷம், மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத ஒரு தோல் வியாதியினால் நான் படுக்கையில்

கிடந்தேன். இறுதியாக அதை நாள்ப்பட்ட சிரங்கு (chronic eczema) என்று அழைத்தார்கள். (இன்றைக்கும் அந்த வியாதிக்கு மருந்து இல்லை.) அப்போது தான் நான் புதிதாக ஒரு கிறிஸ்தவனாக மாறி இருந்தேன், "எனக்கு விசுவாசம் இருந்தால், தேவன் என்னை குணமாக்குவார்" என்று நான் எனக்குள்ளே சொல்லிக்கொண்டே இருப்பேன். உடனடியாக "ஆனால் எனக்கு விசுவாசம் இல்லை" என்பதையும் சொல்லிக்கொள்வேன். ''மோட்ச பயணம்'' என்ற புத்தகத்தில் ஜான் பனியன் எழுதும்போது, உழையான சேறு என்றவர் அழைக்கும், சோர்வின் பள்ளத்தாக்கில் அங்கு நான் இருந்தேன். ஒரு நாள் அந்த இருளான பள்ளத்தாக்குக்குள் ஒரு மிகவும் பிரகாசமான ஒளி கதிர் வெளிச்சம் வீசியது. அது ரோமர் 10:17இலிருந்து வந்தது: ''ஆதலால் விசுவாசம் வரும்...'' விசுவாசம் இல்லை என்றால் அதைப் பெற்றுக்கொள்ள முடியும். அது இல்லாமல் இருக்க அவசியம் இல்லை. விசுவாசம் வரும்... தேவனுடைய வார்த்தையைக் கேட்கிறதினாலே.

புதிய ஏற்பாட்டு காலத்தில் அநேகர் வாசிக்கும் போது, தனியாக இருந்தாலும், சத்தமாகதான் வாசிப்பார்கள். உதாரணத்துக்கு, தன் இரதத்தில் போய்க் கொண்டிருந்த எத்தியோப்பிய மந்திரி ஏசாயா தீர்க்கனுடைய புஸ்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். தனக்குத்தானே அவன் வாசித்தாலும், அவன் வாசிக்கிறதை பிலிப்பு கேட்டான். (அப்போஸ்தலர் 8:26–39ஐ பார்க்கவும்.) சத்தமாக வாசிப்பதைக் குறித்து இன்னொன்றும் உண்டு. அது என்னவென்றால் நீங்கள் சத்தமாக வாசிக்கும்போது, உங்கள் சத்தத்தை நீங்களே

கேட்கிறீர்கள். கேட்கும் போது விசுவாசம் வருகிறது. அதுதான் வேதத்தின் முதல் விளைவு.

## 2. புதிய பிறப்பு

தேவனுடைய வார்த்தை, புதிய பிறப்பை ஏற்படுத்துகிறது. யாக்கோபு தேவனைக் குறித்துச் சொல்லும்போது:

> **அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்.**
>
> **யாக்கோபு 1:18**

தேவன் ஏன் அதைச் செய்தார் தெரியுமா? ஏனென்றால் அவர் அதைச் செய்ய தீர்மானித்தார். அதற்குமேல் நமக்கு எந்த விளக்கமும் கிடைப்பதில்லை. எந்தக் காரியத்தின் ஆரம்பதுக்கு போவோமானாலும், அது தேவனுடைய தீர்மானத்தில்தான் ஆரம்பித்தது என்று நாம் பார்க்கிறோம். தேவன் தமக்கென்று ஒரு ஜனத்தை உருவாக்க தீர்மானித்தார், அவர்கள் வேதமாகிய தம்முடைய வார்த்தையினால், உருவாக்கப்படுவார்கள் என்றும் தீர்மானித்தார். அதுதான் உங்களையும் என்னையும், புது சிருஷ்டியாக, தேவனுடைய ஜனமாக மாற, தேவனிடத்தில் அழைத்து வந்தது. தேவனுடைய வார்த்தையினாலேயே ஆனது.

அடுத்து பேதுரு அதே கருத்தை தொடர்ந்து பேசுகிறார்:

> **ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்**

**கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.**

**1 பேதுரு 1:22-23**

சத்தியத்துக்குக் கீழ்ப்படிகிறதினாலே உங்கள் ஆத்துமாவைச் சுத்திகரிக்கிறீர்கள் என்பதைக் கவனியுங்கள். சத்தியத்தைக் கேட்கிறதினாலே அல்ல, அதற்குக் கீழ்படிகிறதினாலே. விளைவு, மாயமற்ற சிநேகமாக இருக்கும்.

அழிவில்லாத வித்து தேவனுடைய வார்த்தை. ஆகையால் விசுவாசத்தினால் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வித்தாகிய தேவனுடைய வார்த்தையே புதிய பிறப்பை ஏற்படுத்துகிறது. வித்து அழியாதது, அது உருவாக்குகின்ற ஜீவனும் அழியாதது. விதையின் தன்மைதான் அதிலிருந்து தோன்றும் ஜீவனின் தன்மையை நிர்ணயிக்கின்றது. நீங்கள் ஆப்பிள் விதையை விதைத்தால், ஆரஞ்சு மரம் முளைக்காது. விதையின் தன்மை, ஜீவனின் தன்மையை நிர்ணயிக்கும். தேவனுடைய வார்த்தை அழிவில்லாதது, அது உருவாக்குகின்ற ஜீவனும் அழியாதது. தெய்வீகத் தன்மை உடையது, பரிசுத்தமானது, நித்தியமானது.

## 3. ஆவிக்குரிய ஊட்டச்சத்து

நீங்கள் மறுபடியும் பிறந்த உடன் உங்களுக்கு தேவையானது ஊட்டச்சத்து. அற்புதமானது

என்னவென்றால், ஆவிக்குரிய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்துக்கும் தேவையான ஊட்டச்சத்தை தேவனுடைய வார்த்தை கொடுக்கின்றது. நீங்கள் ஆவிக்குரிய குழந்தையாக இருக்கும்போது, உங்களுக்குப் பால் தேவை. அதை தான் பேதுரு அடுத்த அதிகாரத்தில் சொல்லுகிறார்:

> **நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.**
>
> **1 பேதுரு 2:3**

நீங்கள் மறுபடியும் பிறந்தவுடன் தேவனுடைய வார்த்தைக்கு ஒரு நல்ல பசி இருக்க வேண்டும். அநேக கிறிஸ்தவர்கள், மறுபடியும் பிறந்தவுடன், தேவனுடைய வார்த்தையையே வாசிக்க வாஞ்சை உள்ளவர்களாய் இருந்தோம் என்று சாட்சி கொடுப்பார்கள். நாம் மறுபிறப்பு அடைந்தபோது ஆரோக்கியமான குழந்தைகளாக, நமக்கு ஊட்டச்சத்து கொடுக்கக்கூடிய ஒரே காரியத்தை வாஞ்சிக்கிறவர்களாய் பிறந்தோம்.

ஆனால் வளரவளர அப்பத்தைப் போன்ற உணவு நமக்கு தேவையாக இருக்கிறது. சாத்தான் இயேசுவை சோதித்து, கல்லுகளை அப்பமாக்க சொன்னபோது, இயேசு சாத்தனிடம் சொன்னார்:

> **"மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொருவார்த்தையினாலும்பிழைப்பான்."**
>
> **மத்தேயு 4:4**

தேவனுடைய வார்த்தை பால் மட்டும் அல்ல, அது அப்பமாகவும் இருக்கிறது.

நாம் வளரும்போது, இன்னும் திட ஆகாரம் தேவைப்படுகிறது. இதுவும் நமக்கு கொடுக்கப்படுகிறது. எபிரேயர் 5இல் எபிரேயரின் எழுத்தாளர், தங்கள் பின்னணியில் வேத அறிவுடையவர்களாக இருந்த யூதர்களுக்கு எழுதுகிறார். தேவன் நம்மில் சிலரை பார்த்து சொல்ல விரும்பும் காரியத்தை அவர்களுக்குச் சொல்லுகிறார்: "நீங்கள் அறிந்திருக்கிற எல்லாவற்றின் நிமித்தம், நீங்கள் இப்போது செய்வதைக்காட்டிலும்இன்னும்அதிகமாகச்செய்ய வேண்டும்." வேத அறிவு அவர்களுக்கு இருந்தது. ஆனால் அவர்கள் அதைப் பயன்படுத்தவில்லை.

> **காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்.**
>
> **எபிரேயர் 5:12**

அவர்களுடைய முதிர்ச்சியின்மையின் அத்தாட்சி என்ன? அவர்கள் எளிமையான, அடிப்படையான சத்தியங்களுக்கு மேலாக ஒன்றையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

> **பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.**
> **பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.**
>
> **13-14 வசனங்கள்**

முதிர்ச்சியடைய உங்கள் புலன்களை பயிற்றுவிக்க வேண்டும். பயிற்சி செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி, நீங்கள் இருக்கும் சூழ்நிலைகளை அறியவும், நீங்கள் எதிர்க்கும் சக்திகளை அறியவும் அதைப் பயன்படுத்த வேண்டும். முதிர்ச்சிக்கு வழி இதுவே.

நீங்கள் தேவனுடைய வார்த்தையைத் தீவிரமாக பயன்படுத்தாவிட்டால், தேவனுடைய வார்த்தையின்படி வாழாவிட்டால், முதிர்ச்சி அடையவே மாட்டீர்கள். நீங்கள் பாலைக் காட்டிலும் திடமான உணவை அல்லது சிறிது அப்பத்துக்கு மேலாக ஒன்றையும் உண்ணக் கூடாதவர்களாய் இருப்பீர்கள். திடமான ஆகாரம் பயிற்சி எடுத்தவர்களுக்கு மட்டும்தான் — தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி, அதை ஜாக்கிரதையாகவும், தொடர்ச்சியாகவும் தங்கள் வாழ்க்கையில் பிரயோஜனப்படுத்தினவர்களுக்கே உரியது.

## 4. மனதில் வெளிச்சம்

119ம் சங்கீதத்தில் அநேகருக்கு நன்றாக தெரிந்த வசனம், அதில் சங்கீதக்காரன் தேவனிடத்தில் பேசிக்கொண்டு, சொல்லுகிறான்:

> **உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்.**
>
> **சங்கீதம் 119:130**

தேவனுடைய வார்த்தை, நம்முடைய மனதிலும் இருதயங்களிலும் பிரவேசிக்கும்போது அது வெளிச்சத்தைத் தருகின்றது. கல்வியிலிருந்து இது வித்தியாசமானது. கல்வி வெளிச்சம் அல்ல.

நீங்கள் படிப்பறிவு உள்ளவர்களாய் இருந்தும், முற்றிலும் அந்தகாரத்தில் உள்ளவர்களாய் இருக்கலாம். எனக்கு எப்படி தெரியும்? ஏனென்றால் நானும் அப்படித் தான் இருந்தேன். அதிக உயர்வான கல்வி கற்றவன் ஆனால், தேவனுடைய வார்த்தை என் வாழ்வில் பிரகாசிக்கும் வரை, கொடிய இருளில் இருந்தவன். ஆகையால், கல்வி வெளிச்சம் அல்ல என்பதை மனதில் கொள்ளுங்கள்.

பல ஆண்டுகளுக்கு முன் கிழக்கு ஆப்பிரிக்காவில், கல்வியை பெறும் ஒரே நோக்கோடு இருந்த ஆப்பிரிக்க மாணவர்களோடு நான் இடைப்பட்டிருந்தேன். "நீங்கள் கல்வியைத் தேடுகிறீர்கள் ஆனால் ஞானத்தைப் பெறுகிறீர்களா?" என்ற தலைப்பில் நான் அவர்களுக்காக ஒரு சின்ன கைப்பிரதியை எழுதினேன். கல்வியும் ஞானமும் ஒன்றல்ல என்பதை நான் சுட்டிக்காட்டினேன். இந்த கைப்பிரதியில், சிலருக்கு அதிர்ச்சியூட்டின ஒரு காரியத்தை நான் சுட்டிக்காட்டினேன், அது என்னவென்றால், உலகத்தில் அதிக பட்சமான பிரச்சனைகள் கல்வி கற்ற முட்டாள்களினால் தான் உருவாக்கப்படுகின்றன.

ஒருமுறை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசு தலைவர் தியோடர் ரூஸ்வெல்ட், "ஒரு மனிதன் திருடனாக இருந்தால் அவன் ஒரு ரயில் பெட்டியைத் திருடுவான், ஆனால் அதே மனிதனுக்கு கல்வியைக் கற்றுத் தந்தால் அவன் முழு ரயில் பாதையையும் திருடி விடுவான்" என்று கூறினார். ஆகையால் கல்வி பிரயோஜனமான ஒன்றுதான். ஆனால் அது வெளிச்சம் அல்ல என்பதை மனதில்

கொள்ளுங்கள். உண்மையிலேயே, நான் சொன்னதுபோல, அதிக கல்வியைக் கற்ற அநேக மனங்கள், கொடிய இருளில் இருக்கின்றன. தேவனுடைய வார்த்தையின் பிரவேசம் மட்டுமே வெளிச்சத்தைத் தரும்.

## 5. சரீர சுகம்

தேவனுடைய வார்த்தை சரீர சுகத்தைத் தருகின்றது — இதை நான் என் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். 107ம் சங்கீதத்தைத் திருப்பிக் கொள்வோம்.

> **நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய் கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்.**
>
> **சங்கீதம்107:17**

ஒரு தவறான வாழ்க்கை வாழ்வதால் தான் நம்மில் சிலர் நோய்வாய்ப் பட்டிருக்கிறோம் என்று உங்களுக்கு எப்போதாவது தோன்றினது உண்டா? எத்தனையோ பேர் என்னிடத்தில் அற்புத சுகத்துக்காக ஜெபிக்க வந்திருக்கிறார்கள். தவறாக வாழ்வதுதான் அவர்களுடைய பிரச்சனைக்கு மூல காரணம் என்று அவர்கள் கண்டறிவது அரிது. ஆனால் நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் அக்கிரமங்களினாலும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

> **அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசிக்கிறது, அவர்கள் மரணவாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள். தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்;அவர்கள்இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார். அவர் தமது வசனத்தை அனுப்பி**

**அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.**

**வசனங்கள் 18 — 20**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மக்கள், மரணத்தின் விளிம்பில் இருந்தனர். மருத்துவர் அவர்களுக்காக செய்யக் கூடியது வேறொன்றும் இல்லை. என்னுடைய கருத்து இதுவே: சில மக்கள் மிகுந்த தாமதாகும் வரை ஜெபத்தை தவிர்கின்றனர். சங்கீதம் 107ல் விவரிக்கப்பட்டுள்ள மக்கள் மரணத்தின் வாசலண்டையில் இருந்தனர். திடீரென்று, ஜெபித்தால் உதவி கிடைக்கும் என்று அவர்களுக்குத் தோன்றியது. விளைவாக, தேவன் தம்முடைய வார்த்தையை அனுப்பி, அவர்களை சுகமாக்கினார்.

தேவன் தம்முடைய வார்த்தையை அனுப்பும் போது, செய்கிற மூன்று காரியங்களைக் கவனியுங்கள்: அவர் இரட்சிக்கிறார், அவர் குணமாக்குகிறார், அவர் தப்புவிக்கிறார். தேவனுடைய மூன்று இரக்கத்தின் செயல்கள் — பாவத்திலிருந்து இரட்சிப்பது, வியாதியிலிருந்து குணமளிப்பது, பிசாசின் வல்லமையிலிருந்து விடுவிப்பது — தன்னுடைய வார்த்தையின் மூலமாகவே இதை செய்கிறார்.

அநேக கிறிஸ்தவர்கள் யாராவது ஒரு பிரசங்கியார் வந்து தங்கள்மேல் கைகளை வைத்து ஜெபிக்கவும், அவர் ஜெபிக்கும்போது சுகத்தைப் பெறவும் எதிர்பார்க்கிறார்கள். ஒரு வேளை அது நடக்கலாம். அநேகர் என்னிடத்தில் வந்து, நான் அவர்களுக்காக ஜெபித்தால் சுகம் பெறுவார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் அது நடப்பதில்லை. இவர்கள் உண்மையில் தேவனை நோக்கி பார்க்காமல், சகோதரர்

பிரின்ஸை நோக்க ஆரம்பித்திருக்கிறார்களோ என்று நான் கவலைப்பட அரம்பித்துள்ளேன். எந்த பிரசங்கியாருமில்லாமல், தேவனுடைய வார்த்தையை நீங்கள் ஏற்றுக்கொண்டால், நீங்கள் சுகத்தைப் பெறலாம். ஏனென்றால் அவர் தம்முடைய வார்த்தையை அனுப்பி அவர்களை குணமாக்கி, அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்.

எந்த மருந்தும் எனக்கு உதவி செய்யாதபோது என்னை மருத்துவமனையிலிருந்து வெளியே கொண்டுவந்த எனக்கு மிகவும் பிரியமான வசனம் இதோ: நீதிமொழிகள் 4:20—22.

> **என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.**

தேவனுடைய வார்த்தைகள், நம்முடைய உடலுக்கெல்லாம் ஆரோக்கியம் என்று அவர் சொல்லுகிறார்.

நான் மருத்துவமனையில் கிட்டதட்ட ஏழு மாதங்கள் இருந்தேன். மருத்துவர்களுக்கு எனக்கு சுகத்தைக் கொடுக்க இயலவில்லை, நானோ, "எனக்கு விசுவாசம் மட்டும் இருந்தால், தேவன் என்னை நிச்சயம் குணமாக்குவார்" என்று சொல்லிக்கொண்டிருந்தேன். அப்போது தான், "விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வார்த்தையினால் வரும்" என்ற வசனம் எனக்குக் கிடைத்தது. நான் நம்ப

ஆரம்பித்தேன். புது நம்பிக்கையுடன் வேதத்தை மறுபடியும் பார்க்க ஆரம்பித்தேன். ஆனால் எனக்கு ஒரு பிரச்சனை இருந்தது.

நான் ஒரு தொழில்முறை தத்துவவாதியாக இருந்தேன். தத்துவவாதிகளின் வேலையே சாதாரண காரியங்களைக் குழப்பமாக மாற்றுவது. ஆகையால் தேவனுடைய வார்த்தையை அதின் எளிமையில் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தேவன் சுகம் அளிப்பதைக் குறித்து வசனத்தின் மேல் வசனத்தை நான் வாசித்தேன், ஆனால் ''என் ஆத்துமாவை சுகப்படுத்துவார் என்ற அர்த்தம்தான் அதில் இருக்கிறது. என் சரீரத்தைக் குறித்து அவருக்கு அக்கரை இல்லை, அது அழிவுள்ளது, எப்படியும் மரிக்கத் தான் போகிறது'' என்று நினைத்தேன். உதாரணத்திற்கு, ''என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,'' (சங்கீதம் 103:1, 3) என்று வாசித்தவுடன், ''என் ஆத்துமாவின் நோய்கள் மட்டும்தான் அதின் அர்த்தம்'' என்று நான் சொல்வேன்.

ஆனால் நீதிமொழிகள் 4:20 – 22க்கு நான் வந்தபோது, அதைச் சுற்றி என்னால் போக முடியவில்லை. அப்பகுதியில், தேவன், அவருடைய வார்த்தைகளைக் கண்டுப்பிடிக்கிறவர்களுக்கு, அது ''ஜீவனும் அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாக'' இருக்கிறது என்று தெளிவாக சொல்லுகிறார். ஒரு தத்துவவாதிகூட ''உடலுக்கு'' என்ற வார்த்தைக்கு, உடல் என்ற அர்த்தத்தை தவிர வேறே அர்த்தத்தைக் கொடுக்க முடியாது. தேவனுடைய வார்த்தை என் முழு சரீரத்துக்கும் ஆரோக்கியம்.

விளிம்பு குறிப்புகளை என் வேதாகமத்தில் நான் பார்த்தேன், ''ஆரோக்கியம்'' என்ற பதத்திற்கு மாற்று வார்த்தை ''மருந்து'' என்று இருந்தது. ராணுவத்தில் நான் மருத்துவ உதவியாளராக இருந்தேன். ''மக்கள் தங்கள் மருந்தை எப்படி சாப்பிடுவார்கள்?'' என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன். மூன்று வேளையும், ஆகாரத்துக்குப் பின் என்ற பதில் எனக்குக் கிடைத்தது. அதையே நானும் செய்வேன் என்று நான் தீர்மானித்தேன். மூன்று நான்கு மாத காலமாக நான் தேவனுடைய வார்த்தையை, தினமும் மூன்று வேளை, ஆகாரத்துக்குப் பின், என்னுடைய மருந்தாக எடுத்துக்கொண்டேன். தேவனுடைய வார்த்தையை வாசித்து, விசுவாசித்ததின் விளைவாக, உலகத்திலேயே மிகமோசமான, சுகாதாரமற்ற வானிலையுள்ள சூடான் நாட்டில் எனக்கு முழுமையான மற்றும் நிரந்தரமான ஆரோக்கியத்தையும், சுகத்தையும் தேவன் கொடுத்தார்.

## 6. பாவம் மற்றும் சாத்தான் மேல் வெற்றி

சங்கீதம் 119ல், தூய்மை மற்றும் வெற்றி வாழ்வு என்ற கேள்வியின் மையத்திற்கே அழைத்துச் செல்கிறார்:

> **வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே. என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளைவிட்டு வழிதப்பவிடாதேயும். நான் உமக்கு விரோதமாய்ப்**

**பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.**

**சங்கீதம் 119:9,11**

இன்று தூய்மையான வாழ்க்கை வாழ முடியுமா என்று வாலிபர்களில் அநேகர் கேள்வி எழுப்புகிறார்கள். முடியாது என்று அவர்களுக்கு கற்றுக்கொடுப்பவர்கள் கூறுகிறார்கள். ''பாதுகாப்பான பாலியல் உறவுகள்'' என்று அழைக்கப்படும் பாதுகாப்பற்ற உறவை அவர்கள் பரிந்துரைப்பார்கள். ஆனால், தேவனுடைய வார்த்தையின்படி நடக்க தன் வழியில் கவனம் செலுத்துகிற வாலிபன், ஒரு தூய்மையான வாழ்வு வாழ முடியும் என்று வேதம் சொல்லுகிறது.

ஆப்பிரிக்க வாலிபர்கள் மத்தியில் நான் வேலை செய்தபோது அந்த வார்த்தை மீண்டும் மீண்டும் நிறைவேறுவதை நான் கண்டதற்காக தேவனை துதிக்கிறேன். தேவனுடைய வார்த்தைக்கு அவர்கள் செவிக்கொடுத்த படியினாலே, அவர்கள் தூய்மையாக்கப்பட்டு, சுத்தமான வாழ்க்கை வாழ்ந்தார்கள். ஒருவர் ஒருமுறை இப்படியாக சொன்னார்: ''பாவம் உங்களை வேதத்தை விட்டு விலக்கி விடும் அல்லது வேதம் உங்களை பாவத்திலிருந்து விலக்கி வைக்கும்.''

சங்கீதக்காரன் இந்த சாட்சியம் அளிக்கிறார்:

**மனுஷரின் செய்கைகளைக் குறித்து, நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக் கொள்ளுகிறேன்.**

**சங்கீதம் 17:4**

சாத்தானை எதிர்கொள்ளும் ஓர் ஆயுதம் உண்டு—ஆவியின் பட்டயம். எபேசியர் 6:17 கூறுவது போல், ''ஆவியின் பட்டயமாகிய தேவனுடைய வசனத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.'' பட்டயமாகிய தேவனுடைய வார்த்தையை எடுத்து, விசுவாசத்தினால் அதை பயன்படுத்தும்போது, அது நமக்கு இயற்கைக்கப்பாற்பட்ட ஞானத்தையும் அதிகாரத்தையும் கொடுக்கிறது. மத்தேயு 4ல், நாம் முன்பு பார்த்தது ஞாபகம் இருக்கிறதா? இயேசு சாத்தானை சந்தித்தபோது, "எழுதியிருக்கிறபடி" என்ற ஒரே ஆயுதத்தை பயன்படுத்தினார்.

## 7. சுத்திகரிப்பும் பரிசுத்தமாகுதலும்

பவுல் பின்வரும் வார்த்தைகளைக் கணவன்மாருக்கு எழுதுகிறார். ஆனால் அவர் கூறும் உண்மையான கருத்து, கணவர்கள் தங்கள் மனைவிகளுடன் இடைபடுவதைக் குறித்து அல்ல. மாறாக, இது மணவாளனாகிய கிறிஸ்து தனது மணவாட்டியாகிய திருச்சபையுடன் உறவுக்கொள்வதாகும். கிறிஸ்து (இரட்சகராகவும், ஆண்டவராகவும், மணவாளனாகவும்) சபைக்கு செய்துள்ள இரண்டு முக்கியமான ஏற்பாடுகளை பவுல் நமக்கு எடுத்து கூறுகிறார்:

> **புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்**

**பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.**

**எபேசியர் 5:25 — 27**

கிறிஸ்து நமக்காக செய்த முதல் ஏற்பாடு, அவர் நம்மை தம்முடைய சொந்த இரத்தத்தினால், தமக்கென்று மீட்டுக்கொண்டார். ஆனால் அதையும் கடந்து ஒன்று இருக்கிறது: திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் நம்மை சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறார். தேவனுடைய வார்த்தை நம்மைச் சுத்திகரிக்கிறது, பரிசுத்தமாக்குகிறது.

யோவான் இயேசுவை குறித்து, ''இவர் ஜலத்தினாலும், இரத்தத்தினாலும் வந்தவர்'' (1யோவான் 5:6) என்று சொன்னார்—ஜலத்தினால் மட்டும் அல்ல இரத்தத்தினாலும். தன்னுடைய பலியின் இரத்தத்தினாலே நம்மை மீட்கிறார். ஆனால் தன்னுடைய வார்த்தையின் ஜலத்தினால் நம்மைச் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறார். இரண்டும் நமக்கு தேவை. ஜலத்தினால் சுத்திகரிக்கப்படும்படியாக, இரத்தத்தினாலே மீட்கப்படுகிறோம்.

## 8. நமது கண்ணாடி

யாக்கோபு தன்னுடைய நிரூபத்தில், தேவனுடைய வார்த்தை நமக்குள் செய்யும் கிரியையைக் குறித்தும், நாம் அவருடைய வார்த்தையை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைக் குறித்தும் எழுதுகிறார்:

**ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும்**

**ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.**

**யாக்கோபு 1:21-25**

தேவனுடைய வார்த்தை நம்மிடத்தில் வரும்போது, நமக்கு இரண்டு பொறுப்புகள் உள்ளன: அதைத் தாழ்மையுடன் பெற்றுக்கொண்டு, அதைப்போல் செயல்படுவதற்கு. யாக்கோபு ஒரு கண்ணாடியின் உதாரணத்தைப் பயன்படுத்துகிறார். தேவனுடைய வார்த்தையை நாம் வாசித்து, அது நம்மை எதிர்கொள்ள அனுமதிக்கும்போது, அது நம்முடைய கண்ணுக்குமுன்வைக்கப்படும்கண்ணாடியைபோல் இருக்கிறது. அதற்குள் பார்க்கும்போது, உங்கள் சரீர பிரகாரமான தோற்றத்தைக் காண்பிக்காது,

நீங்கள் உள்ளே எப்படி இருக்கிறீர்கள் என்பதை – உங்கள் சுபாவம் மற்றும் தன்மையைக் காண்பிக்கும்.

நீங்கள் கண்ணாடியில் பார்த்து, ஏதோ ஒன்று சரியில்லை என்று காணும்போது, அதைச் சரி செய்வதே புத்தியுள்ள செய்கை என்று யாக்கோபு சுட்டிக்காட்டுகிறார். உங்கள் முடி சரியாக இல்லையென்றால் அதைச் சீவிக்கொள்வீர்கள். உங்கள் முகம் அழுக்காக இருந்தால் கழுவிக்கொள்வீர்கள். கண்ணாடியில் காண்பதை வைத்துச் செயல்படுவீர்கள். தேவனுடைய வார்த்தையென்னும் கண்ணாடியில் பார்க்கும்போது அதையே நீங்கள் செய்ய வேண்டும். உங்கள் ஆவிக்குரிய மனுஷனை அதில் கண்டு, எதைச் செய்ய வேண்டுமென்று காண்பிக்கின்றதோ அதைக் கொண்டு செயல்பட வேண்டும்.

இதோ, அந்தக் கண்ணாடியை நாம் பார்க்கையில், நமக்கு உற்சாகமூட்டும் ஒரு பார்வை

> **நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை [இயேசுவை] நமக்காகப் [பிதாவானவர்] பாவமாக்கினார்.**
>
> **2 கொரிந்தியர் 5:21**

இயேசுவினால், அந்த கண்ணாடியை நாம் பார்க்கும்போது, நம்முடைய பாவம் நிறைந்த நிலையை நாம் காண்பதில்லை. மாறாக, கிறிஸ்துவின்மேல் வைத்த விசுவாசத்தினால் நமக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள தேவனுடைய நீதியையே காண்கிறோம்.

## 9. நமது நியாயாதிபதி

நியாயத்தீர்ப்பு என்பதை நாம் சிந்திக்க விரும்புவதில்லை. ஆனால் உண்மை என்னவென்றால், நியாயத்தீர்ப்பு என்பது தேவன் மனித இனத்துடன் இடைப்படும் மொத்த செயல்களின் ஒரு பகுதியாகும். மேலும், கடைசி முயற்சியில், இறுதி நீதிபதி தேவன்தான்.

இது வேதம் முழுவதிலும் தெளிவாக உள்ளது. முழு மனித இனத்தின் இறுதி நீதிபதியாக தேவன் முன் வைக்கப்படுகிறார். என்றாவது ஒரு நாள் நாம் அனைவரும் தேவனுக்கு பதில் சொல்லப் போகிறோம்.

வேதத்தின் பல பகுதிகளிலும் இந்த உண்மையைக் காண்கிறோம். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்:

> **நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று ... நியாயம் தீர்க்கக்கடவர்...**
>
> **நியாயாதிபதிகள் 11:27**

> **மெய்யாய் பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்.**
>
> **சங்கீதம் 58:11**

> **அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.**
>
> **1 பேதுரு 1:17**

இந்த உண்மையை நாம் எதிர்கொள்ள வேண்டும்: நியாயத்தீர்ப்பு நிச்சயம் உள்ளது.

அனைத்திற்கும் இறுதி நீதிபதி தேவனே. ஒரு தெய்வீக நியாயத்தீர்ப்பு உள்ளது என்பதை வேதம் வெளிப்படுத்துகிறது: நியாயத்தீர்ப்பு எவ்வாறு நிகழப்போகிறது என்பதற்கான திட்டத்தை தேவன் வைத்திருக்கிறார். மிக எளிமையாகக் கூறினால், பிதாவாகிய தேவன் நீதிபதி. ஆனால் அவர் இயேசுவை நீதிபதியாக்கினார். இயேசு, இதையொட்டி, வார்த்தையை நீதிபதியாக்கினார்.

பிதா எவ்வாறு நியாயத்தீர்ப்பைக் குமாரனுக்கு ஒப்படைத்துள்ளார் என்று பார்ப்போம். இயேசு கூறுகிறார்:

> **அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்.**
>
> **யோவான் 5:22-23**

பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு மனுஷகுமாரனாக இருப்பதால் நியாயத்தீர்ப்பை நிறைவேற்ற அவருக்கு அதிகாரம் கொடுத்தார். அவர் இரண்டு காரணங்களுக்காக இதைச் செய்தார்: எல்லாரும் பிதாவைக் கனம்பண்ணுவதுபோல குமாரனையும் கனம்பண்ண வேண்டும், இரண்டாவதாக, இயேசு மனுஷகுமாரன் என்பதால். இயேசு தேவனுடைய குமாரன் மட்டுமல்ல, அவர் மனுஷகுமாரனும் கூட. மனுஷகுமாரனாக,

அவர் நம்மைப் புரிந்துக்கொள்கிறார்—நமது பலவீனங்கள் மற்றும் நமது சோதனைகளைப் புரிந்துகொள்கிறார். அவர் ஒரு நியாயமான மற்றும் இரக்கமுள்ள நீதிபதி, ஏனென்றால் அவர் நம் தன்மையைப் பகிர்ந்து கொள்கிறார்.

இந்த உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்: குமாரன் நீதிபதியாக தனது அதிகாரத்தை வார்த்தைக்கு நியாயந்தீர்க்க ஒப்படைத்துள்ளார். இயேசு விளக்குகிறார்:

> **ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.**
>
> **யோவான் 12:47—48**

இறுதியில் நாம் எதிர்கொள்ள வேண்டிய நீதிபதி பிதாவோ, குமாரனோ அல்ல. அது வார்த்தையாக இருக்கும்.

இந்த நியாயத்தீர்ப்பு விஷயத்தில் நாம் கருத்தில் கொள்ளவேண்டிய ஒரு கூறு உள்ளது: நம்மை நாமே நியாயந்தீர்ப்பது. 1 கொரிந்தியரில், பவுல் நமக்கு ஒரு நடைமுறைப் பயன்பாட்டைக் கொடுக்கிறார். கர்த்தருடைய பந்தியில் தகுதியற்ற விதத்தில் பங்குகொள்வதன் மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஆளான மக்களைப் பற்றி பேசுகையில், பவுல் அத்தகைய நியாயத்தீர்ப்பை நாம் அனுபவிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறுகிறார்.

**நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.**

**1 கொரிந்தியர் 11:31**

நம்மை நாமே நியாயந்தீர்ப்போமானால், தேவனுடைய தீர்ப்பிலிருந்து தப்பிக்கலாம். எப்படி? தேவனுடைய வார்த்தையின் கண்ணாடியைப் பார்ப்பதன் மூலம், அது நமக்குக் காண்பிப்பதை ஏற்றுக்கொண்டு, அது ஒரு கண்ணாடி மட்டுமல்ல, நம் நீதிபதியும் கூட என்பதை உணர்ந்து கொள்வதன் மூலம், மனத்தாழ்மை, மனந்திரும்புதல், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல் ஆகியவை நியாயத்தீர்ப்பின் பயத்திலிருந்து நம்மை விடுவிக்கின்றன.

ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவில் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும்போது, 'நல்மனசாட்சியின் பதில்' பற்றி வேதம் பேசுகிறது (1 பேதுரு 3:21). ஒரு நல்ல மனசாட்சியின் பதிலை நாம் எவ்வாறு பெற முடியும்? தேவனுடைய வார்த்தையில் உள்ள நிபந்தனைகளைப் பார்த்து, அந்த அளவுகோல்களை நம் வாழ்வில் பின்பற்றுவதினால். இதன் விளைவாக, நாம் இனி தேவனுடைய தீர்ப்புக்கு பயப்படத் தேவையில்லை. வார்த்தையால் நம்மை நாமே நியாயந்தீர்த்தோம்; எனவே, நம் வாழ்வில் தேவனுடைய நியாயத்தீர்ப்பை நாம் எதிர்கொள்ள வேண்டியதில்லை.

## ஒன்பது விளைவுகளின் சுருக்கம்

இந்தச் சிறு புத்தகத்தை முடிக்கையில், தேவனுடைய வார்த்தையின் அந்த ஒன்பது விளைவுகளை நான் மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

- தேவனுடைய வார்த்தை விசுவாசத்தை உருவாக்குகிறது.
- இது புதிய பிறப்பின் விதை.
- இது ஆவிக்குரிய ஊட்டச்சத்தை அளிக்கிறது.
- இது மனதில் வெளிச்சத்தை உருவாக்குகிறது.
- இது உடல் ஆரோக்கியத்தை வழங்குகிறது.
- இது பாவம் மற்றும் சாத்தானின் மீது வெற்றியை சாத்தியமாக்குகிறது.
- இது சுத்திகரிப்பையும், பரிசுத்தத்தையும் வழங்குகிறது.
- இது ஒரு ஆவிக்குரிய கண்ணாடி.
- இது நமது இறுதி நியாயாதிபதி.

வழியில் நாம் கண்டறிந்த உண்மைகளை மீண்டும் கூறுவதன்மூலம் தேவனுடைய வார்த்தையின் அதிகாரம் மற்றும் வல்லமையின் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்வோம். பின்னர் அந்த சத்தியங்களில் நடக்க உதவும்படி தேவனிடம் ஜெபிப்போம்.

''வேதாகமத்தை நான் மனிதனின் வார்த்தையாகப் பெற்றால், அது என்னில் முழுமையாகச் செயல்படாது என்பதை நான் உறுதியாக அறிக்கையிடுகிறேன். ஆனால், நான் அதை தேவனுடைய வார்த்தையாகப் பெற்றால், அது என்னில் திறம்பட செயல்படுகிறது. நான் என்னுடைய வேதத்தைப் படிக்கும்போது, கர்த்தரிடம், 'இது உமது வார்த்தை என்று நான் நம்புகிறேன். நான் அதை உம் வார்த்தையாக ஏற்றுக்கொள்கிறேன். என் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும்—ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம்—இவற்றில் நீர் எதைச் செய்ய வார்த்தையை அனுப்பினீரோ, அனைத்தையும், அது எனக்குள்

செயல்படுத்தட்டும். ஏனென்றால் நான் அதை நம்புகிறேன்."

> அன்புள்ள ஆண்டவரே, உமது வார்த்தையை வழங்கியதற்கு நன்றி. அதைப் புரிந்து கொள்ளவும், பெற்றுக்கொள்ளவும், என் வாழ்க்கையின் பகுதியாக்கவும், அதில் நடக்கவும், உமக்கும் இயேசுவின் நாமத்திற்கும் மகிமையைக் கொண்டுவரும் விதத்தில் செயல்பட எனக்கு உதவி செய்யும். ஏனெனில், அந்த விலைமதிப்பற்ற நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

# எழுத்தாளரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915–2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் பெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரேய பல்கலைக்கழகத்தில் எபிரேய மற்றும் அராமிய மொழிகள் உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றியபோது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்தச் சந்திப்பில் இருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார்; இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும், கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபைப்பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும்

மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச் சமமாக பொருத்தமானதாகவும், பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80 க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார். அவற்றில் பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷியன், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது. ‘இயேசு திரும்பும் வரை’ தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்ப்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது. இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு,

இங்கு செல்க: www.derekprince.com